**அக்டோபர் – 24**

# TNPSC துளிகள்

- உத்தரப் பிரதேச அரசானது தீபாவளியின் போது அயோத்தியில் நடைபெறவுள்ள தீப உத்சவ மேளாவுக்கு மாநில விழா அந்தஸ்தை வழங்கியுள்ளது.

# தேசியச் செய்திகள்

## Danx 19

- அந்தமான் மற்றும் நிக்கோபர் கட்டுப்பாட்டகமானது (ANC - Andaman and Nicobar Command) 2019 ஆம் ஆண்டின் அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் பாதுகாப்புப் பயிற்சியின் (DANX-19) இரண்டாவது பதிப்பை நடத்தியது. இது ஒரு பெரிய அளவிலான கூட்டு சேவைப் பயிற்சியாகும்.
- இந்திய ராணுவம், கடற் படை, விமானப் படை மற்றும் கடலோர காவல் படை ஆகியவற்றின் படைப் பிரிவுகள் அணி திரட்டல் மற்றும் படைத் துறை நடவடிக்கைகளை மேற்கொண்டன.
- புதிதாக உருவாக்கப்பட்ட ஆயுதப் படை சிறப்பு நடவடிக்கைப் பிரிவின் (AFSOD - Armed Forces Special Operations Division - AFSOD) சிறப்புப் படைகளும் இந்த பதிப்பில் பங்கேற்றன.



### *ANC பற்றி*

- அந்தமான் மற்றும் நிக்கோபர் கட்டுப்பாட்டகம் ஆனது இந்திய ஆயுதப் படைகளின் முதலாவது மற்றும் ஒரே முத்தரப்பு சேவை கட்டுப்பாட்டகமாகும். இது அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளில் உள்ள போர்ட் பிளேயரில் அமைந்துள்ளது.

## சுற்றுலாப் பயணிகளுக்காக சியாச்சின் பகுதி திறப்பு

- தற்பொழுது சியாச்சின் பகுதியானது சுற்றுலாப் பயணிகள் மற்றும் சுற்றுலாவிற்காகத் திறக்கப்பட்டுள்ளதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவித்துள்ளார்.

- மேலும் இவர் கிழக்கு லடாக்கில் உள்ள ஷியோக் ஆற்றின் மீது அமைந்த உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பாலத்தையும் திறந்து வைத்தார்.
- 'படைத் தளபதி செவாங் ரிஞ்சன் சேது' என்ற ஒரு பாலமானது லடாக் பிராந்தியத்தின் முன்னணிப் பகுதியில் 14,650 அடி உயரத்தில் எல்லை சாலைகள் அமைப்பால் (Border Roads Organisation - BRO) கட்டப்பட்டுள்ளது.

*சியாச்சின் பற்றி*

- சியாச்சின் பனிப் பாறையானது உலகின் மிக உயர்ந்த போர்க் களமாகும்.
- இது இமயமலையின் கிழக்குக் காரகோரம் பகுதியில் அமைந்துள்ள ஒரு பனிப் பாறையாகும்.
- காரகோரம் சில சமயங்களில் "மூன்றாவது துருவம்" என்று அழைக்கப்படுகின்றது.
- இது இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கட்டுப்பாட்டுக் கோடு முடிவடையும் பகுதியான NJ9842ன் வடகிழக்கில் உள்ளது.
- 2004 ஆம் ஆண்டில், அப்போதைய இந்தியக் குடியரசுத் தலைவரான அப்துல் கலாம் இப்பகுதிக்கு பயணம் மேற்கொண்ட முதலாவது இந்தியக் குடியரசுத் தலைவர் ஆவார்.
- 2005 ஆம் ஆண்டில், அப்போதைய இந்தியப் பிரதமரான மன்மோகன் சிங் இப்பகுதிக்கு பயணம் மேற்கொண்ட முதலாவது இந்தியப் பிரதமராக உருவெடுத்துள்ளார்.
- அதன் பின்னர் தற்போதைய இந்தியப் பிரதமரான நரேந்திர மோடியும் இந்தப் பகுதிக்கு 2014 ஆம் ஆண்டில் பயணம் மேற்கொண்டார்.
- இந்திய இராணுவம் 1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சியாச்சினுக்கு பயணங்களை மேற்கொள்வதற்கு அனுமதித்தது. இந்த சியாச்சின் பயணங்கள் 1984 ஆம் ஆண்டில் மொத்தமாக நிறுத்தப்படும் வரை தொடர்ந்தது.
- 1984 ஆம் ஆண்டில், ஒரு இராணுவ நடவடிக்கையான "மேக்தூத் நடவடிக்கையை" இந்தியா தொடங்கியது. இந்த நடவடிக்கையானது சியாச்சின் பனிப்பாறை முழுவதையும் இந்தியாவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தது.

## ஆசாத் ஹிந்த் அரசின் 76வது ஆண்டு தினம்

- ஆசாத் ஹிந்த் அரசு (Indian National Government – INA / இந்திய தேசிய அரசு) அமைக்கப்பட்டதின் 76வது ஆண்டு நினைவு தின விழாவானது டெல்லியில் உள்ள செங்கோட்டையில் நடத்தப்பட்டது.
- 1943 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று நேதாஜி சிங்கப்பூரில் ஆசாத் ஹிந்த் அரசாங்கத்தை அமைத்தார்.
- 1944 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 14 அன்று INA அமைப்பின் சௌகத் அலி மாலிக் தலைமையிலான பகதூர் படைப் பிரிவானது இந்தோ-மியான்மர் எல்லைக்கு அருகில் மணிப்பூரில் உள்ள மொய்ராங் என்ற நகரத்தை கைப்பற்றியது.

# சர்வதேசச் செய்திகள்

## இலங்கை - FATFன் "சாம்பல் நிறப் பட்டியலில் இருந்து நீக்கம்

- நிதியியல் நடவடிக்கைப் பணிக் குழுவானது (FATF - Financial Action Task Force) இலங்கையை அதன் 'சாம்பல் நிறப் பட்டியலில்' இருந்து நீக்கியுள்ளது.
- FATF ஆனது தனது உறுப்பு நாடுகளின் நிதி மோசடி தடுப்பு நடவடிக்கைகள் மற்றும்

உறுப்பு நாடுகளின் தீவிரவாதத்திற்கு நிதியுதவி அளித்தலைத் தடுப்பதற்கான (AML / CFT - Anti-Money Laundering and Countering the Financing of Terrorism) நடைமுறைகள் ஆகியவற்றைக் கண்காணிக்கின்றது.

- FATF என்பது G7 இன் முன்னெடுப்பின் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அரசாங்கங்களுக்கிடையேயான ஒரு அமைப்பாகும்.
- பண மோசடி, பயங்கரவாத நிதியுதவி மற்றும் சர்வதேச நிதி அமைப்பின் ஒருமைப்பாட்டிற்கான பிற தொடர்புடைய அச்சுறுத்தல்களை எதிர்த்துப் போராடுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- FATFன் செயலகமானது பாரிஸில் உள்ள OECD இன் (Organisation for Economic Co-operation and Development - பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு) தலைமையகத்தில் அமைந்துள்ளது.

## ரோஹிங்கியா அகதிகள்


- ஏறக்குறைய 6,000-7,000 ரோஹிங்கியா அகதிகள் பாஷன் சார் தீவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள முகாமிற்கு இடம்பெயர ஒப்புக் கொண்டுள்ளனர்.
- பாஷன் சார் தீவானது தென்கிழக்கு வங்க தேசத்தில் உள்ள ஹதியா தீவிற்குக் கிழக்கே 30 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு மக்கள் வசிக்காத தீவாகும்.
- பாஷன் சார் தீவானது சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு மேக்னா நதியின் முகத்துவாரத்தில் உருவாக்கப்பட்டது.
- ரோஹிங்கியா மக்கள் மியான்மரின் ராகைன் மாகாணத்தில் வசிக்கும் ஒரு நாடற்ற இந்தோ-ஆரிய இனக் குழுவாகும்.
- அதில் பெரும்பான்மையானவர்கள் முஸ்லிம்கள் ஆவர். அதில் இந்துக்கள் சிறுபான்மையினராக உள்ளனர்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆந்த்ராக்ஸ்நோய் - அசாம்

- அசாமில் உள்ள போபிதோரா வனவிலங்கு சரணாலயத்தில் ஆந்த்ராக்ஸ் நோயின் காரணமாக ஒரு எருமை மரணமடைந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- போபிடோரா வனவிலங்கு சரணாலயமானது உலகில் அதிக எண்ணிக்கையிலான ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களைக் கொண்டுள்ளது. காசிரங்கா சரணாலயத்தைப் போன்ற நிலப் பரப்பு மற்றும் தாவரங்களைக் கொண்டுள்ளதன் காரணமாக இது பெரும்பாலும் 'மினி காசிரங்கா' (சிறிய காசிரங்கா) என்று அழைக்கப்படுகின்றது.
- ஆந்த்ராக்ஸ் என்பது பேசிலஸ் ஆந்த்ராசிஸ் எனப்படும் பாக்டீரியாவால் ஏற்படும் ஒரு கடுமையான தொற்று நோயாகும்.
- இந்த நோய் பாதிக்கப்பட்ட விலங்குகளுடன் தொடர்பில் உள்ள மனிதர்களுக்கும் ஆந்த்ராக்ஸ் நோய் பரவும் தன்மை உடையது.
- இது பொதுவாக மக்களுக்கிடையே நேரடியாகப் பரவுவதில்லை.
- இது தோல், நுரையீரல், குடல் மற்றும் ஊசி போடுதல் என நான்கு வடிவங்களில் பரவலாம்.
- இது தோல் மீது வீக்கமடைந்துள்ள பகுதி, அதனைச் சுற்றியுள்ள கொப்புளங்கள், மார்பு

வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு மற்றும் காய்ச்சல் ஆகியவற்றால் வகைப்படுத்தப் படுகின்றது.




# மாநிலச் செய்திகள்

## அதிகமான வறண்ட மாவட்டங்கள் - ஹரியானா

- ஹரியானாவில் அதிகமான வறண்ட மாவட்டங்கள் இருக்கின்றன. இங்கு மொத்தமுள்ள 21 மாவட்டங்களில் 19 மாவட்டங்கள் வறண்ட மாவட்டங்களாக உள்ளன.
- ஹரியானாவில் ஒட்டுமொத்தமாகப் பருவமழைப் பற்றாக்குறையானது 42% ஆக இருந்தது. மணிப்பூர் (-56%) மாநிலத்திற்குப் பிறகு இப்பருவமழை காலத்தில் நாட்டின் மிக வறண்ட மாநிலமாக ஹரியானா மாநிலம் மாறியுள்ளது.
- இந்திய வானிலை ஆய்வு மையமானது (India Meteorological Department - IMD) ஒரு மாவட்டத்தில் "பற்றாக்குறையான" மழைப்பொழிவு என்பதை இயல்பான மழைப் பொழிவை விட 20% முதல் 59% வரையிலான குறைவான மழைப்பொழிவு என்று வரையறுக்கின்றது.
- 60% அல்லது அதற்கு மேற்பட்ட பற்றாக்குறையான மழைப்பொழிவானது "மிகக் குறைந்த" அல்லது "மிகப்பெரிய அளவிலான பற்றாக்குறை" என்ற பிரிவில் வருகின்றது.
- இந்தியா கடந்த 25 ஆண்டுகளில் இம்முறை மிக அதிக மழைப்பொழிவை பெற்றுள்ளது.
- எவ்வாறாயினும், தரவு கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு ஐந்து மாவட்டங்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்கள் என நாட்டில் மொத்தம் 154 மாவட்டங்கள் இப்பருவமழை காலத்தில் குறைவான அல்லது பற்றாக்குறையான மழையைப் பெற்றுள்ளன.

## கர்நாடக மாநிலத் தகவல் ஆணையத்தில் ஏற்பட்டுள்ள மோதல்கள்

- கர்நாடகாவில் பணியாற்றிக் கொண்டிருக்கும் ஒன்பது தகவல் ஆணையர்கள் அம்மாநில தலைமை தகவல் ஆணையரான என் சி சீனிவாஸுக்கு எதிராக கர்நாடக ஆளுநர் வஜுபாய் வாலாவுக்கு கடிதம் எழுதியுள்ளனர்.
- இக்கடிதமானது அம்மாநில தலைமைத் தகவல் ஆணையரின் "தவறான நடத்தை" மற்றும் தலைமை தகவல் ஆணையராக "அவரது இயலாமை" ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றது.
- ஒரு அரசாணையின் மூலம் கர்நாடக தகவல் ஆணையமானது மாநில அரசால் அமைக்கப்பட்டு இருக்கின்றது.
- இந்த மாநில தகவல் ஆணையமானது ஒரு மாநில தலைமை தகவல் ஆணையர் (State Chief Information Commissioner - SCIC) மற்றும் ஆளுநரால் நியமிக்கப்படும் 10க்கும் மேற்படாத மாநிலத் தகவல் ஆணையர்கள் (State Information Commissioners - SIC) ஆகியோரைக் கொண்டிருக்கும்.
- தகவல் உரிமைச் சட்டம், 2005 ஆனது மாநில அளவில் ஒரு மாநிலத் தகவல் ஆணையத்தை உருவாக்க வழிவகுக்கின்றது.

# விளையாட்டுச் செய்திகள்

## ரொனால்டோ சிங் - தங்கம்

- தென் கொரியாவின் இஞ்சியோனில் நடைபெற்று வரும் ஆசிய ட்ராக் மிதிவண்டி சாம்பியன்ஷிப் போட்டியின் ஆண்கள் இளையோர் கெய்ரின் நிகழ்வில் இந்திய மிதிவண்டி வீரரான ரொனால்டோ சிங் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- இப்போட்டியில் ரொனால்டோவைத் தவிர, ஜேம்ஸ் சிங் என்பவர் ஒரு வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
- ஆண்கள் மற்றும் பெண்களின் இளையோர் தடகள அணியானது இரண்டு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

## இராணுவ விளையாட்டுகள்

- 7வது சிஐஎஸ்எம் உலக ராணுவ விளையாட்டுப் போட்டிகளில் மாற்றுத்திறன் கொண்ட ஆண்களின் 100 மீ மற்றும் 400 மீ ஐடி 1 போட்டிகளில் பாரா-தடகள வீரரான ஆனந்தன் குணசேகரன் இரண்டு தங்கப் பதக்கங்களை வென்றுள்ளார்.
- சீனாவின் வுஹானில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியாவின் முதலாவது தங்கப் பதக்கத்தை தமிழ்நாட்டைச் சேர்ந்த குணசேகரன் வென்றுள்ளார்.
- ஏழாவது இராணுவ உலக விளையாட்டுக்கள் சீனாவில் முதன்முறையாக நடத்தப்படுகின்றன. மேலும் இது சீனாவில் நடைபெறும் மிகப்பெரிய இராணுவ விளையாட்டு நிகழ்வாகும்.

# முக்கிய தினங்கள்

## உலகப் புள்ளியியல் தினம் - அக்டோபர் 20

- இது 2010 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று உலகம் முழுவதும் முதல் முறையாக கொண்டாடப்பட்ட ஒரு சர்வதேச தினமாகும்.
- இது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை கொண்டாடப்படுகின்றது.
- ஐக்கிய நாடுகளின் புள்ளியியல் ஆணையமானது இத்தினத்தை அறிவித்தது.
- அடுத்த உலக புள்ளியியல் தினமானது 2020 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று கொண்டாடப்பட உள்ளது.
- 2015 ஆம் ஆண்டு அக்டோபர் 15 அன்று இரண்டாவது உலக புள்ளியியல் தினமானது "சிறந்த தரவு, சிறந்த வாழ்வு" என்ற கருப்பொருளுடன் கொண்டாடப்பட்டது.
- புகழ்பெற்ற புள்ளியியல் நிபுணரான பிரசாந்த சந்திர மஹலானோபிஸின் பிறந்த நாளான ஜூன் 29 அன்று புள்ளியியல் தினத்தை இந்தியா கொண்டாடுகின்றது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★